**7.2.15**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>பொள்ளாச்சியில் கால்நடைத் திருவிழா</u>



அழிந்து வரும் நாட்டு மாடுகளைப் பாதுகாக்கும் விதமாகவும், விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாகவும் பொள்ளாச்சியை அடுத்த சமத்தூரில் கால்நடைத் திருவிழா வெள்ளிக்கிழமை தொடங்கியது. இரண்டு நாள்கள் இந்தக் கால்நடைத் திருவிழா நடைபெறவுள்ளது. இந்தத் திருவிழாவில் மாடுகள், ஆடுகள், குதிரைகள் உள்ளிட்ட கால்நடைகள் அதிக அளவில் பங்கேற்றுள்ளன. சிறிய வயது முதல் பெரிய வயதுடைய நாட்டு மாடுகளுக்கு அழகுப் போட்டிகள் நடத்தப்பட்டன. மாடுகளின் உடல் அழகு, அமைப்பு, வளர்க்கப்பட்ட முறை ஆகியவற்றில் சிறந்த மாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் உரிமையாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இதுகுறித்து சமத்தூர் வாணவராயர் பவுண்டேசன், சங்கர் வாணவராயர் கூறியதாவது: தெற்கு ஆசியாவில் புகழ்பெற்ற பொள்ளாச்சி மாட்டுச் சந்தை உள்பட்ட பல சந்தைகளில் ஒரு காலத்தில் விவசாயப் பயன்பாட்டிற்காக மாடுகள் விற்பனை செய்யப்பட்டன. ஆனால், தற்போது அந்தச் சந்தைகளில் இறைச்சிக்காக மாடுகள் விற்பனை செய்யப்பட்டு வருவது வேதனை அளிக்கிறது. சமத்தூரில் நாட்டு மாடு மாதிரிப் பண்ணை அமைப்பதுடன், விவசாயிகள் நலன் காக்க ஆலோசனைகள் வழங்கப்படும் என்றார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

விதைக் கிராமத் திட்டம் குறித்து ஆரணியை அடுத்த லாடவரம் கிராமத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த முகாமுக்கு வேளாண்மைத் துறையின் உதவி இயக்குநர் வே.சத்தியமூர்த்தி தலைமை தாங்கினார். போளூர் விதை சான்று அலுவலர் மு.சாந்தி, வேளாண்மை அலுவலர் பவித்ரா தேவி, உதவி வேளாண்மை அலுவலர் பாலசுந்தரம், அட்மா திட்ட அலுவலர் சதீஷ்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வயலில் செயல் விளக்கம்**

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் ஒன்றியம் கொடுக்கன் குப்பம் கிராமத்தில் உயிர் உரமிடுதல் குறித்து வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி நேரில் சென்று செயல் விளக்கமளித்தார். ஒரு ஏக்கருக்கு அசோஸ்பைரில்லம்(நெல்), பாஸ்போபேக்டீரியா தலா 4 எண்களை நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து நடவு செய்யும் முன் நடவு வயலில் மேலே தூவி விட்டு பின் நாற்றுக்களை நட வேண்டும். இந்த உயிர் உரங்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்தும், மண்ணில் கரையாமல் உள்ள மணிச் சத்தையும் கரைத்து பயிருக்கு வழங்குகின்றன. இந்த முறையில் உரச்செலவு 25 சதவீதம் குறையும். மகசூலும் 10 முதல் 25 சதவீதம் அதிகரிக்கும் என விளக்கினார். உதவி வேளாண் அலுவலர் ரகுபதி மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

## கோழிக்காய்ச்சல் தடுப்பூசி முகாம்

கரூர்: கரூர் மாவட்டத்தில் வரும், 9ம் தேதி முதல், 22ம் தேதி வரை கோழிக்காய்ச்சல் நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது. கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி வெளியிட்ட அறிக்கை: ராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் இருந்து, 1.40 லட்சம் டோஸ்கள் தடுப்பூசி மருந்து பெற்று, பயன்பாட்டுக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அவர்களது பகுதிகளிலுள்ள கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் கால்நடை மருந்தகங்களில், கோழிகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளவும். கால்நடை பராமரிப்புத் துறையினரால் மேற்கொள்ளப்படும் முகாமை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புறக்கடையில் பராமரித்து வரும் கோழிகளுக்கு வெள்ளைக்காய்ச்சல் நோய் வருவதால், கிராமப் புறங்களில் பொருளாதார இழப்பை தடுக்க, தடுப்பூசி போடுதல் அவசியம். எனவே, பொதுமக்கள் அனைவரும் கால்நடை பராமரிப்புத் துறையினருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி பயன்பெற வேண்டும்.

## உழவர் பண்ணை பள்ளி துவக்க விழா

தர்மபுரி: நல்லம்பள்ளி யூனியனுக்கு உள்பட்ட ஏலகிரியில், உழவர் பண்ணைப் பள்ளி தொடக்க விழா நடந்தது. "அட்மா' விரிவாக்க சீரமைப்புத் திட்டம் சார்பில், கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகரித்தல், பராமரிப்பு குறித்த பண்ணைப் பள்ளி முதல் வகுப்பை கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குனர் லோகநாதன் துவக்கி வைத்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் மோகன் தலைமை வகித்தார். துணை இயக்குனர் பாஸ்கர் முன்னிலை வகித்தார். கறவை மாடுகள் பராமரிப்பு தொழில்நுட்பம் குறித்து, கால்நடை பல்கலைக் கழக

உதவிப் பேராசிரியை மீனலோசினி பயிற்சியளித்தார். நல்லம்பள்ளி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அமுதவள்ளி, துணை வேளாண் அலுவலர் சேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை, வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் அருண்குமார், ராஜதுரை, கார்த்திகேயன் ஆகியோர் செய்திருந்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>முல்லைப்பெரியாறில் 152 அடி நீர் தேக்குவதற்காக பேபி அணையை பலப்படுத்த தமிழக அரசு முடிவு</u>**



கூடலூர் : பெரியாறு அணையில் 152 அடி தண்ணீர் தேக்கும் வகையில் பேபி அணையை பலப்படுத்தும் பணியை தொடங்க தமிழகம் முடிவு செய்துள்ளது. விரைவில் நடைபெற உள்ள கண்காணிப்புக் குழு கூட்டத்தில் இதுகுறித்த தகவல்களைத் தெரிவிக்க தமிழக அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். பெரியாறு அணையை கண்காணித்து பராமரிக்க நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட கண்காணிப்பு குழுவினர் கடந்த 2014, ஜூலை 17ம் தேதி அணையை பார்வையிட்டு 142 அடி தண்ணீர் தேக்கும் விதமாக 13 மதகுகளையும் இறக்கினர். அணையின் நீர்மட்டம் 136 அடியை தாண்டியபோது இக்குழு 4ம் முறையாக நவ. 3ம் தேதி அணையை ஆய்வு செய்தது. அப்போது நீர்மட்டம் 142 அடி உயர்வதை தடுக்கும் வகையில் கேரள அரசு, பேபி அணை யில் நீர் கசிவதாகவும், மெயின் அணையில் 11, 13வது ஷட்டர்கள் பலமிழ ந்து உள்ளதாகவும் கூறியது. இதனை தொடர்ந்து பராமரிப்பு பணிகளை தமிழக அதிகாரிகள் செய்து முடித்த நிலையில், கடந்த நவ. 21ம் தேதி பெரியாறு அணை

நீர்மட்டம் 142 அடியாக உயர்ந்தது. பின், கண்காணிப்பு குழு ஆய்வு செய்து, அணை பலமாக இருப்பதாக கூறியது. அடுத்த கட்டமாக அணை யில் 152 அடி தண்ணீர் தேக்கும் வகையில், தமிழக பொதுப்பணித் துறையினர் பேபி அணையில் மராமத்து பணிகளை செய்ய, வல்லக்கடவு வனப்பகுதி வழியாக பொருட்களை கொண்டு சென்றனர். ஆனால், கேரள வனத்துறை மராமத்துப் பணிக்காக பொருட்கள் கொண்டு சென்ற வாகனங்களை அனுமதிக்க மறுத்ததோடு, பெரியாறு அணைக்குச் செல்லும் தமிழக அதிகாரிகள் தேக்கடியிலிருந்து படகிலோ அல்லது வல்லக்கடவு வழியாக ஜீப்பிலோ செல்வதாக இருந்தால், பதிவேட்டில் கையெழுத்திட வேண்டும் என புதிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியது. இதனால் தமிழக அதிகாரிகள் அணைக்குச் செல்லமுடியாமலும், மராமத்து பணி செய்ய முடியாமலும் இருந்தனர். இந்நிலையில், இரண்டு மாதங்களுக்குப்பின் பெரியாறு அணை துணைக்குழு கூட்டம் இன்று நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் கேரள வனத்துறையின் அத்துமீறலை தமிழக அதிகாரிகள் வெளிப்படுத்த முடிவு செய்துள்ளனர். தொடர்ந்து, வரும் 20ம் தேதி நடைபெற உள்ள நாதன் தலைமையிலான கண்காணிப்புக்குழுவின் கூட்டத்தில், பேபி அணையைப் பலப்படுத்தும் பணியை தொடங்க இருப்பது தொடர்பாக பேச உள்ளதாகவும் தமிழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## <u>நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கரும்பு சாகுபடி</u>

தர்மபுரி, : நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கரும்பு சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகளு க்கு வேளாண் துறை ஆலோ சனை வழங்கியுள்ளது. தர்மபுரி வேளாண்மை உதவி இயக்குனர் ராஜமாணிக்கம் விடுத்துள்ள செய்தி: தர்மபுரி மாவட்ட வேளா ண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மற்றும் விரிவாக்க சீரமைப்பு திட்டம் மூலம் கரும்பு சாகுபடியில் அதிக மகசூல் பெற நவீன தொழில்நுட்ப ஆலோசனைகள் அளிக்கப்படுகிறது. இதன்படி, ஒரு விதை பரு சீவல்களில் இருந்து நாற்றங்கால் அமைக்க வேண் டும். பின்னர் 25 முதல

35 வயதான இளம் நாற்றுக் களை வரிசைக்கு 5 அடியும், நாற்றுக்கு 2 அடியுமாக நடவு செய்ய வேண்டும். இடைவெளியில் ஊடு பயிராக உளுந்து, பச்சைப்பயிறு, காராமணி போன்ற பயிறுகளை பயிரிடலாம். இதன் மூலம் மண் வளம் காப்பதுடன் கூடுதல் மகசூலும் கிடைக்கிறது. இடை வெளி அதிகமாக இருப்பதால் பயிர்களுக்கு சூரிய ஒளி அதிகமாக கிடை க்கிறது. கரும்பின் எடை, தரம், சர்க்கரை கட்டுமானம் அதிகரிக்கிறது. இத்துடன் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு மேற் கொள்ள வேண்டும். இதன் மூலம் மொத்த சாகுபடி குறைந்து மகசூல் அதிகரிக்கிறது. இந்த நவீன தொழில் நுட்பத்தை தர்மபுரி வட்டார விவசாயிகள் கடைபிடித்து பயன்பெறவேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஏலகிரியில் அட்மா பண்ணை பள்ளி துவக்க விழா

தர்மபுரி, : அட்மா விரி வாக்க சீரமைப்பு திட்டம் சார்பில் கறவை மாடுகளின் பால் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் பராமரிப்பு குறித்து உழவர் பண்ணை பள்ளி யின் முதல் வகுப்பு தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஏலகிரியில் நடந்தது. வேளாண் துறை இணை இய க்குனர் மோகன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் கால் நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் லோக நாதன் பண்ணை பள்ளியை துவக்கி வைத்தார். கால்நடை பல்கலைக்கழக உதவி பேராசிரியர் மீன லோ சனி கறவை மாடுகள் பராமரித்தல் தொடர்பான தொழில்நுட்பங்களை விளக்கி பேசினார். பண்ணை பள்ளியில் கலந்து கொண்ட 25 விவசாயிகளுக்கு கால் நடைகளுக்கான தாது உப்பு கலவை, குடல்புழு நீக்கம் மற் றும் உண்ணி நீக்க மருந்துகள் வழங்கப்பட்டன. நல்லம்பள்ளி வட்டார வேளா ண் மை உதவி இயக்குனர் அமுதவள்ளி, துணை வேளா ண்மை அலுவலர் சேகரன், விவசாயிகள் கல ந்து கொண் டனர். ஏற்பாடுகளை வட்டார தொ ழில் நுட்ப மேலாளர் அருண்குமார், ராஜதுரை, கார்த்திகேயன் செய்திருந்தனர்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமில் 2.13 லட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை**

ஈரோடு, : கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 192 முகாம் நடத்தப்பட்டு அதில் 2.13 லட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் ஜவுளி தொழிலுக்கு அடுத்தப்படியாக விவசாய தொழில் இருந்து வருகிறது. குறிப்பாக கால்நடை வளர்ப்பு தொழிலில் அதிக அளவு விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை 3.70 லட்சம் கால்நடை உள்ளது. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை தடுக்கும் வகையில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் பல்வேறு சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது.அதன்படி இந்த ஆண்டு மாவட்டத்தில் 216 சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடத்த ரூ.10.80 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி மூலமாக குக்கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், சினை பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசி, அறுவை சிகிச்சை, சினை தரிக்காத கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சை, கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை மாவட்டத்தில் கால்நடை சிறப்பு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் அட்டணைமேலூர், காளிசெட்டிபாளையம், வண்ணாந்துறை புதூர், கிழக்கு தோட்டம், தாழ்குணி, கொண்டையம்பாளையம், கரடிகல், கணபதிபாளையம், கொளத்தூர், வாய்ப்பாடி புதூர். விலாமரத்துகாடு, கூலிக்காரன் பாளையம், வடுகபாளையம், கும்மக்காளிபாளையம் உள்ளிட்ட 34 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு இந்த முகாம்கள் நடத்தப்படடுள்ளது.

முகாமில் இதுவரை 2 லட்சத்து 13 ஆயிரத்து 225 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு 26 ஆயிரத்து 860 விவசாயிகள் பயனடைந்துள்ள னர். இதுகுறித்து கால்நடை பராமரிப்புத்துறையினர் கூறுகையில், கால்நடைகளுக்கு மருத்துவ வசதி இல்லாத கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு அங்கு கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி 192 முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து குக்கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு முகாம்கள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதுஎன்றனர்.

**<u>ரூ.6.96 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனை</u>**

கோவை,: கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திங்கள், வியாழன் தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் 72 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் 28 குவின்டாலும் என மொத்தம் 100 குவின்டால் விற்பனைக்கு வந்தது. இதை கோவனூர், தொண்டாமுத்தூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். விற்பனைக்கு வந்த மஞ்சள் அனைத்தும் விற்பனையானது. ஏலத்தில், விரலி மஞ்சள் குவின்டால் ரூ.6,826 முதல் ரூ.7,602 வரையும், கிழங்கு மஞ்சள் ரூ.6,351 முதல் ரூ.7,015 வரையும் விற்றது. இதன்மூலம் விரலி மஞ்சள் சராசரி விலை ரூ.7,100. கிழங்கு மஞ்சள் சராசரி விலை ரூ.6,600. ஈரோடு, கோவை, பொள்ளாச்சியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விற்பனை மொத்த மதிப்பு ரூ.6.96 லட்சம். இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.3.70 லட்சம் குறைவாகும். அதே போல், விரலி மஞ்சள் சராசரி விலை குவின்டாலுக்கு ரூ.100ம், கிழங்கு மஞ்சள் ரூ.250ம் குறைந்துள்ளது.

**<u>தர்ப்பூசணி அறுவடை தீவிரம்</u>**

உடுமலை, : உடுமலை, மடத்துக்குளம் பகுதிகளில் தர்ப்பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எரிசனம்பட்டி, எலைய முத்தூர், குட்டிக்

கவுண்டனூர், ஆண்டிக்கவுண்டனூர் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது தர்ப்பூசணி அறுவடை நடந்து வருகிறது. ஏக்கருக்கு அதிகபட்சம் 13 டன் வரைகிடைக்கிறது.

நோய் பாதித்த பகுதிகளில் மகசூல் பாதிக்கும் அதிகமாக குறைவாக காணப்படுகிறது. வியாபாரிகள் நேரடியாக வந்து விவசாயிகளிடம் தர்ப்பூசணியை வாங்கி செல்கின்றனர். அதிகபட்சம் கிலோ ரூ.6 வரை விலை கிடைக்கிறது. நோய் பாதித்த பகுதிகளில் மகசூல் குறைந்ததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

ஊட்டி, : விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 20ம் தேதி ஊட்டி கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. இதுகுறித்து தோட்ட கலைத்துறை இணை இயக்குநர் மணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப் பதாவது: நீலகிரி மாவட்டம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 20ம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் தலை மையில் நடக்கிறது. இதில், மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகள் ஏதே னும் இருப்பின் தெரிவிக்கலாம். மேலும், விவசாயிகளின் பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து விவசா யம் சம்பந்தப்பட்ட நீர்பாசனம், இடு பொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும் கடிதம் மூலம் தெரிவிக்கலாம். கோரிக்கைகள் அடங்கிய மனு அல்லது கடிதத்தை தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர், தபால் பெட்டி எண் 72, ஊட்டி 643001 என்ற அலுவலக முகவரிக்கு தபா லிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அரசு கூட்டுறவு ஏல மையத்தில் 92 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர், : குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 5வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 4 லட்சத்து 53 ஆயிரத்து 108 கிலோ தேயிலை தூள்

விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 2 லட்சத்து 50 ஆயிரத்து 915 கிலோவும், டஸ்ட் ரகம் 2 லட்சத்து 2 ஆயிரத்து 193 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று தேயிலை தூளை கொள்முதல் செய்திருந்தாலும் 92 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. இருப்பினும் அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை விலை உயர்ந்தது. அதன்படி, இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.54 முதல் ரூ.60, உயர் வகை ரூ.70 முதல் ரூ.85, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.55 முதல் ரூ.65, உயர் வகை ரூ.75 முதல் ரூ.85 வரை விலை கிடைத்தது. கடந்த சில வாரங்களாக தேயிலை தூள் விற்பனையும் அதன் விலையும் உயர துவங்கி உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## திருக்கடையூர் பகுதியில் 1500 ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி

தரங்கம்பாடி, : திருக்கடையூர் சிங்காநொடை, ஆணைக்கோயில், பத்துகட்டு, காலமாநல்லூர், கிடங்கல், காழியப்பநல்லூர், அனந்த மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் திடல்கள் அதிகம் இருப்பதால் 1500 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 90 மற்றும் 120 நாள் வயதுடைய நிலக்கடலையை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். மழை காலங்களை தவிர்த்து மற்ற காலங்களில் நிலக்கடலை பயிரிட்டு வருகின்றனர். கடந்த மாதம் விட்டு விட்டு மழை பெய் தது நிலக்கடலை சாகுபடியாளர்களுக்கு சாதகமாக அமைந்தது. நடப்பாண்டில் நிலக்கடலை மகசூல் திருப்திகரமாக இருக்கும் என்று நிலக்கடலை விவசாயிகள் நம்பியுள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விளைபொருட்களை விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகள் முன்பதிவு செய்ய வேண்டும்**



விருத்தாசலம், விளை பொருட்களை விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் முன்பதிவு செய்ய வேண்டும் என்று விருத்தாசலத்தில் கோட்டாட்சியர் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

நெல்மூட்டைகள்வரத்துஅதிகரிப்பு

விருத்தாசலம் பகுதியில் நெல் அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு விற்பனைக்காக நெல்மூட்டைகள் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நெல்மூட்டைகளை அன்றைய தினமே எடைபோட்டு, கொள்முதல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனை கண்டித்து நேற்று முன்தினம் விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி கலைத்தனர். இதுபோன்ற சம்பவங்கள் இனி நடைபெறாமல் தடுக்கும் வகையில் கோட்டாட்சியர் செந்தில்குமார் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், துணை போலீஸ் சூப்பிரண்டு கார்த்திகேயன், விற்பனைக்கூட கண்காணிப்பாளர் குமரகுரு, வேளாண் அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்பதிவு

கூட்டத்தில், ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு விளை பொருட்களை கொண்டு வருவதற்கு முன்னதாக விவசாயிகள், ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகளிடம் முன்பதிவு செய்து குறிப்பிட்ட நாளில் எடை போடுவதற்கான குவியல்(லாட்) எண்ணை பெற்று கொள்ள வேண்டும். இந்த எண்ணை பெற வரும் விவசாயிகள், வாக்காளர் அடையாள அட்டை அல்லது குடும்ப அட்டை நகல், பட்டா நகலை அதிகாரிகளிடம்கொடுக்கவேண்டும்.

<u>10-ந்தேதிமுதல்அமல்</u>

மேலும் எடுத்து வர இருக்கும் நெல் மூட்டையின் எடையை முன்கூட்டியே உத்தேசமாக தெரிவித்திட வேண்டும். இதன் மூலமாக குறிப்பிட்ட நாளில் நெல் உடனடியாக எடை போட்டு பணம் பட்டுவாடா செய்ய முடியும். அதேபோல், இரவு, பகல் என விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படாது. இது தொடர்பான அறிவிப்புகளை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும். இந்த நடைமுறைகளை வருகிற 10-ந்தேதி(செவ்வாய்க்கிழமை) முதல் அமல்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

## <u>காவிரி ஆற்றங்கரையோரம் விவசாய பணிகள் தீவிரம்</u>



காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து குறைந்துள்ளதால் ஏரியூர் பகுதிகளில் கரையோரம் விவசாய பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தண்ணீர்வரத்துகுறைந்தது

காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து சற்று அதிகரிப்பதும், குறைவாக வருவதுமாக இருந்து வந்தது. பருவமழை பொய்த்து போனதால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் படிப்படியாக குறையத் தொடங்கியது. மேலும் காவிரி ஆறு ஆங்காங்கே குட்டை போல் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அணையில் தண்ணீர் வற்றியதால் காவிரி ஆற்றில் உள்ள கிறிஸ்தவ

இரட்டை கோபுரங்கள், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் வெளியே தெரிய தொடங்கி உள்ளது. இதனால் தர்மபுரி மாவட்டம் நாகமரை, ராமகொண்டஅள்ளி, மஞ்சாரஅள்ளி ஊராட்சிகளுக்குட்பட்ட 25-க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் காவிரி ஆற்றின் கரையோரம் விவசாய பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக டிராக்டர் மூலம் ஏர் உழுது உழவு பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். ஒரு சில விவசாயிகள் எள், சோளம், கம்பு, நிலக்கடலை உள்ளிட்டபயிர்கள்செய்துவருகின்றனர்.

உழவுபணிமும்முரம்

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், பரந்து விரிந்து காணப்படும் மேட்டூர் அணையில் 80 அடிக்கு கீழ் நீர்மட்டம் குறையும் காலங்களில் காவிரி கரையோர பகுதிகளில் இருபுறமும் கம்பு, சோளம், ராகி, நிலக்கடலை மற்றும் காய்கறிகள் பயிர் செய்து வருகிறோம். தற்போது மேட்டூர் அணையில் 75 அடியாக தண்ணீர் குறைய தொடங்கி உள்ளது. காவிரி ஆற்றில் குட்டை போல் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால் செல்லமுடி, நாகமரை, நெருப்பூர் உள்ளிட்ட காவிரி கரையோர கிராமங்களில் வசிக்கும் மக்கள் சுமார் நூற்றுக்கணக்கான ஏக்கரில் விவசாய பணிகளில் விறுவிறுப்பாக ஈடுபட்டு உள்ளனர். காவிரி கரையோரம் 2 போக பயிர் சாகுபடி செய்து விடுவோம். பருவமழை பொய்த்து போனதால் காவிரி ஆற்றை நம்பி வாழ்க்கை நடத்தி வரும் எங்களுக்கு இது வாழ்வாதாரமாக உள்ளது. இதில் கிடைக்கும் வருமானத்தை வைத்து குடும்பத்தை நடத்துகிறோம். மேட்டூர் அணையின் நீர்மட்டம் மேலும் குறைந்தால் கூடுதல் நிலங்களில் விவசாய பணிகளில் ஈடுபடுவோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

<u>தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு சரக்குரெயிலில் 1,908 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டது</u>



தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு 1,908 டன் நெல் அரவைக்காக சரக்குரெயிலில்அனுப்பப்பட்டது.

நெல்அறுவடை

தஞ்சை மாவட்டத்தில் 2014-15-ம் ஆண்டு சம்பா, தாளடி பருவத்தில் 1 லட்சத்து 35 ஆயிரத்து 689 எக்டேரில் சாகுபடி நடைபெற்றுள்ளது. தற்போது சம்பா நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குவதற்காக தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 348 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் ஆர்வமுடன் அறுவடை செய்த நெல்லை கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்கின்றனர். விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல் மூட்டைகள் அங்கேயே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங் களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம். அதன்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் அரவைக்காக லாரியில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்னர் இந்த ஆண்டு முதன்முதலாக அரவைக்கு நெல்மூட்டைகள் கொண்டு செல்லப்படுவதால் தொழிலாளர்கள் சிறப்பு பூஜைகளை செய்து, லாரிகளில் இருந்த நெல்மூட்டைகள் அனைத்தையும் சரக்கு ரெயிலில் ஏற்றினர். மொத்தம் 42 வேகன்களில் 1,908 டன் நெல் ஏற்றப்பட்டன. பின்பு நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து திருவள்ளூர் மாவட்டத்திற்கு அரவைக்காக கொண்டு

செல்லப்பட்டன. இதுவரை 81 ஆயிரம் டன் நெல் கொள்முதல் இது குறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் முகமதுபாதுஷா கூறும்போது, தஞ்சை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. விவசாயிகளிடம் இருந்து நெல்லை அறுவடை செய்வதற்காக 7 நடமாடும் கொள்முதல் நிலையங்கள் உள்பட 348 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் தேவைக்கு ஏற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதற்கு அனைத்து எடைஅளவு, சாக்குகள் உள்பட அனைத்தும் தயார் நிலையில் உள்ளது. இதுவரை 81 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 5 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.